விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வைப்பு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 184 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 06 வியாழக்கிழமை (20.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் இன்று ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

பெருங்கற்காலப் பண்பாட்டை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக்கூடிய வகையிலான சான்றுகள் கிடைக்கப்பெறும் என நம்பப்படும் ஆனைக்கோட்டையில், இன்று வியாழக்கிழமை அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கையின் பெருங்கற்கால பண்பாடுகள் நிறைந்ததாகக் கருதப்படும் ஆனைக்கோட்டை 15

## இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கை விஜயம்

### தமிழ்க் கட்சித் தலைவர்களையும் சந்திப்பார்



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி பாராளு 15

# இலங்கையின் வறுமை நிலை தொடரும்

### ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளால் இலங்கையின் வறுமை நிலை அடுத்த சில ஆண்டுகளுக்குத் தொடரும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## நயினைத் தாய்க்கு இன்று தேர்



15

## சுன்னாகத்தில் கசிப்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் 15

## ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு அரகலய போராட்டக் குழுவினர் புதிய அரசியலமைப்பை ஆரம்பித்தனர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை அடிப்படையாகக் கொண்டு அரகலய போராட்ட குழுவினர் இணைந்து, மக்கள் போராட்ட முன்னணி என்ற புதிய அரசியல் இயக்கத்தினை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக பழைய மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கி மக்கள் போராட்ட முன்னணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரகலய செயற்பாட்டாளர் லகிரு 15

## மோ.சைக்கிள் விபத்து; 16 வயதுச் சிறுவன் பலி

### நீர்வேலியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் 16 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். 15

## வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும்

### ஐ.நாவில் இலங்கைக்கு அழுத்தம்

(ஜெனிவா)

இலங்கை அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என ஐ.நாவில் வலியுறுத்தப்பட்டது.

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 56ஆம் அமர்வில் இலங்கை தொடர்பான இணைத் தலைமைநாடுகளின் அறிக்கை நேற்று முன்வைக்கப்பட்டது.

கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மாசிடோனியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் 16

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு 716 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப் பொருட்களுடன் 18 பெண்களும் 698 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி 15

## கடன் வழங்கும் நாடுகளுடன் விரைவில் உடன்படிக்கை

### ஜனாதிபதி நம்பிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடன் வழங்கும் நாடுகளுடன் அடுத்த சில வாரங்களில் உடன்படிக்கை ஒன்றை எட்டவுள்ளதாக நம்பிக்கை வெளி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுதந்திரக் கட்சியின் தலைவராக நிமல் சிறிபால டி சில்வா நியமனம்



(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளதுடன், பொதுச் செயலாளராக துமிந்த திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை குறித்த வழக்கு கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரையில் நீடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# தொழில்துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய வங்கி ஸ்தாபிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தொழில்துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கியொன்று ஸ்தாபிக்கப்பட உள்ளதாகவும், இதன் மூலம் தொழில் துறையினருக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிட்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் முதன்முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இன்டர்நெசல் இன்டஸ்ரியல் எக்ஸ்போ- 2024 (சர்வதேச கைத்தொழில் கண்காட்சி) நேற்று ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தொழில்துறையினரின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பொருளாதார ஆணைக் குழுவொன்று உருவாக்கப்படும் என்றும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்த "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" என்ற புதிய நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

'நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளின் போதும் சிலர் நீதிமன்றத்தை நாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் எனவும் இவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும், தேசிய கொள்கையின் ஊடாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ம-7,10)

# வாடகை வருமான வரி குறித்து அச்சம் கொள்ள வேண்டாம்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

உத்தேச வாடகை வருமான வரி இந்த நாட்டின் 90% மக்களுக்கு நன்மை பயக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கசினோக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தங்கள் தொடர்பான கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்

இலங்கையில் உள்ள பணக்காரர்களில் 10% மட்டுமே இந்த வரி விதிக்கப்படும் எனவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எனவே இந்த வரி தொடர்பில் சாதாரண மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம்.

10% பணக்காரர்களிடம் இருந்து அறவிடப்படும் பணம் ஏனைய 90% மக்களின் தேவைக்கே செலவிடப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7,10)

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய் சந்தி

மணமகள் தேவை

பிறந்த திகதி - 15.05.1993 புரட்டாதி நட்சத்திரம். பேராதனை பல்கலைக் கழகத்தில் Mechanical Engineering பட்டம் பெற்று Lecturer ஆக இருந்தவர். Scholarship இல் Ireland University ல் PHD படித்துக் கொண்டிருப்பவர். படிப்பு முடிந்த பின் மீண்டும் பேராதனை பல்கலைக்கழகத்தில் Lecturer ஆக பொறுப்பேற்க இருப்பவர். Doctor/ Engineer/ CIMA/ IT/ MBA படித்து முடித்த அழகான பெண்ணை எதிர்பார்க்கின்றார்கள். மணமகன் சைவபோசனம் அசைவபோசனையாளர்களும் விண்ணப்பிக்கலாம். கல்வியும் அழகும் பொருந்தினால் சைவ போசனம் முக்கியமாக பார்க்கப்பட மாட்டாது.

தொடர்பு : 077 663 0273 (C-644)

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய் சந்தி

மணமகள் தேவை

18.07.1992ல் பிறந்தவர். அவிட்டம் 4ம் பாதம். NDT, Civil Engineering. கொழும்பு HEMAS நிறுவனத்தில் Assistant Manager ஆக பணிபுரிபவர். உயரம் 5 அடி 5 அங்குலம் கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 077 663 0273 (C-644)

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய் சந்தி

மணமகள் தேவை

08.01.1991ல் பிறந்த சித்திரை 2ம் பாதம், 5 அடி 11 அங்குல உயரமுடைய சிங்கப்பூரில் Telecommunication & Network Engineer ஆக வேலைபார்க்கும் மணமகனுக்கு IT Software Engineer/ Doctor/ CIMA/ MBA/ படித்து பட்டம் பெற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 077 663 0273 (C-644)

# யாழில் ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்

## மூவர் கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது.

இதன்போது வீட்டிற்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

அதனால் சுமார் 10 இலட்ச ரூபாய்க்கு மேல் நஷ்டமேற்படுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மூவரை கைது செய்தனர்.

அச்சுவேலி, மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்களையே பொலிஸார் கைது செய்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி இருந்தனர்.

நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து, சந்தேகநபர்கள் மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

அதேவேளை ஊடகவியலாளர் வீட்டில் வைத்து தீ மூட்டப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பவற்றையும், பொலிஸார் மன்றில் பாரப்படுத்தியதை அடுத்து, அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க மன்று அனுமதித்துள்ளது. (ம-7,10,33)

# வீரமாகாளித் தாயாருக்கு இன்று இரதோற்சவம்

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லைநகர் அருள்மிகு வீரமாகாளி தாயாரின் வருடாந்த மகோற்சவந்தனில் இரதோற்சவப் பெருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை அம்பாளுக்கு விசேட அபிசேகங்கள் இடம்பெற்று அதனை தொடர்ந்து 7.00 மணிக்கு வசந்தமண்டபூஜை இடம்பெற்று விநாயகப்பெருமான், வள்ளி தேவனே சமதே முருகப் பெருமான் சகிதம் வீரமாகாளித் தாயார் எழுந்தருளி 8.30 மணியளவில் சித்திர இரதத்தில் ஆரோகணித்தலை தொடர்ந்து முத்தேர் பவனி சிறப்புற இடம் பெறவுள்ளது. (ம-7,10)

# முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய மீது புதிய முறைப்பாடு



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சராக இருந்த போது அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோக பூர்வ வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியதாக அவர் மீது நபர் ஒருவரால் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சராக இருந்த காலத்தில் அமைச்சினால் அவருக்கு 2 உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், அமைச்சர் பதவியை இழந்ததன் பின்னர் வாகனங்களை மீள ஒப்படைக்காமல் முறைகேடாக பயன்படுத்தியதாக கெஹலிய ரம்புக்வெல்ல மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.கந்தர்மடம் அரசடி வீதி


# அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

# ஆனி மஹோற்சவ விஞ்ஞாபனம் 2024

## இரதோற்சவம்

## 20.06.2024





### மகோற்சவ பிரதம குருக்களின் ஆசிச் செய்தி

இலங்கைத் தீவின் தலையாம் யாழ்.மாநகரின் அரசடி வீதிப் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் செல்வ நாகபூசணி அம்பாள் இன்று தேரேறி வந்து அருள் மாரி பொழிகின்றாள்.

புவனம் எல்லாம் பூத்தவள் அண்டமெல்லாம் காப்பவள் இரதத்திலே ஆரோகணிக்கும் காட்சி அற்புதமானது.அத்தகைய இரதோற்சவ தினத்தில் பக்த அடியார்கள் அனைவரும் அம்பாளை தரிசித்து மன சஞ்சலங்களிலிருந்தும் சங்கடங்களிலிருந்தும் விடுபட ஆதிநாயகி செல்வ நாகபூசணி அம்பாளை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

**சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள்**
**கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்**
**இருபாலை, கோப்பாய்.**

### ஆலய தர்மகர்த்தாவின் வாழ்த்துச் செய்தி

ஈழத்து வட பால் யாழ்.மாநகரில் கோயில் கொண்டு எழுந்தருளி திருவருட் கடாட்சத்தை பரப்பிக் கொண்டு இருக்கும் அருள் மிகு செல்வ நாகபூசணி அம்பாள் இன்று சித்திரத்தேரில் அமர்ந்து அருள் பாலிக்கும் திருக்காட்சி காண கண்கள் பல கோடி வேண்டும்.

அம்பாளின் தேர்வடம் பிடித்து மும்மலங்கள் நீங்கி மாயைகள் அறுபட்டு சகல ஜென்ம சாப விமோஷனம் பெற்று அம்பாளின் அருட் கடாட்சத்தை பெறுவோம் வாரீர். தேர் வடம் பிடிப்போம் வாரீர்!

**குருநாதன் ஜயந்தன்**

**மயூரன்ஸ்**
நகை மாளிகை
22 கரட் தங்கப்பவுண்
நகை வியாபாரம்
**077 651 0251**
07.கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ்**
ஜுவல்லறி
22 கரட் தங்கப்பவுண்
No-30,32,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tell:**021 222 5511**
Hot Line-**077 224 5511**

**நயினை அம்மன்**
ஜுவல்லறி
22 கரட் தங்கப்பவுண்
இல.129 B,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: **077 657 0661**

**அக்ஷா**
நகை மாடம்
22 கரட் தங்கப்பவுண்
Tel: **021 222 4324**
**077 717 2726**
இல.34 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மதனா**
நகை மாடம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்
Tel: **021 222 5526**
இல.70, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**RANA ELECTRONICS**
Dealers in Electronics & Electrical.
**021 222 5105**
**077 373 1019**
No.92 Stanley Road,
Jaffna.

**நியூ மைதிலி** ஜுவலர்ஸ்
நடராசா கஜந்தன்
newmaithily40@gmail.com
newmaithily jewellers
38.40.கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
**சந்தோஷ்** ஜுவலர்ஸ்
**021 221 1177**
**021 221 1188**

**ஷீலா** நகையகம்
தங்கப்பவுண்
நகை வியாபாரம்
இல 177,D
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
**021 222 4451**
**077 345 0392**


**வெஸ்ரன்**
ஜுவல்லர்ஸ்
22 கரட் தங்கப்பவுண்
**021 222 6916**
**076 658 0661**
இல.81.கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறி **கஜமுகன்**
ஜுவல்லர்ஸ்
இல.26 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:
**021 222 4250**
**077 542 5720**

(சி-632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேசிய மட்ட பளுதூக்கல் மகாஜனாவுக்கு 3 பதக்கங்கள்




தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பழுதூக்கல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மூன்று பதக்கங்களைப் பெற்றுள்ளது.

தேசிய மட்ட பழுதூக்கல் போட்டிகள் கண்டி பிலிமத்தலாவ மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்று வருகின்றது.

16 வயது ஆண்கள் பிரிவில் ஆர்.ரதீசன் 67 கிலோ எடைப்பிரிவில் முதலிடத்தையும், 16 வயது பெண்கள் பிரிவில் 45 கிலோ எடைப் பிரிவில் ரி.ஆரதி 50 கிலோ எடையினைத் தூக்கி 3 ஆம் இடத்தையும், 18 வயது பெண்கள் பிரிவில் 71 கிலோ எடைப்பிரிவில் ஆர்.ஶ்ரீவித்தகி 90 கிலோ எடையினை தூக்கி முதலிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 300 | 300-500 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 240 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 700 | 750 | 600 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 140 | 120 | 200 |
| கோவா | 300 | 320 | 250 | 250 | 320 |
| கரட் | 350 | 450 | 500 | 320 | 500 |
| பூசணி | 180 | 150 | 150 | 150-180 | 200 |
| புடோல் | 300 | 300 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 300 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 800 | 1200 | 700 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 150 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 350 | 250-300 | 300 |
| லீக்ஸ் | 700 | 600 | 600 | 400 | 800 |
| பீற்றூட் | 800 | 550 | 700 | 300 | 800 |
| கறிமிளகாய் | 700 | 700 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 450 | 250-600 | 900 |
| போஞ்சி | 800 | 800 | 700 | 450 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 | 120-150 | 140 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | 200 | 100 | 40 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 90 | 80 |
| ஈரப்பலா | 160 | 160 | 120 | 80 | 280 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3147

Search for people places and things

Nagendram Home

### வர்சிகா




### விதுஷா




### தனுஷ்கா




### வாணதி




### திவ்யா




### பவிதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர் [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் நிலநடுக்கம்; முல்லை வானில் மர்மஒளி
## அச்சத்தில் மக்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் நிலநடுக்கம் பதிவான வேளை முல்லைத்தீவு வான் பரப்பில் ஒளி வடிவம் தென்பட்டது.வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு 10.55 முதல் 11.10 மணிவரை நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.

வவுனியா, மதவாச்சி உள்ளிட்ட பிர தேசங்களில் நில அதிர்வு உணரப்பட்ட நிலையில் அது றிக்டர் அளவு கோலில் 2.3 ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன் முல்லை மாவட்டத்தில் இரவு வேளை வான் பரப்பில் தொடர்ச்சியாக நீல நிறமாக ஒரு உருவம் ஒளிர்ந்து கொண்டிருக்க அதனை சுற்றி வேறு நிற ஒளி உவரும் விட்டு விட்டு ஒளிர்ந்து கொண்டிருந்தது. நிலநடுக்கம் காரணமாக வான் பரப்பில் குறித்த வடிவம் தென்பட்டு இருக்கலாம் என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.( நி-6-290)


லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (356)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.


இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


## 31ஆம் நாள் நினைவுகளில்



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.யசியானா மரிய சந்திரகுமார்
அவர்களின் அன்புத் தந்தை

அமரர். கிறகோறி யேசுராஜன்
(ஓய்வு நிலை ஆசிரியர்)

அவர்கள் இறைபதமடைந்த 31 ஆம் நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு பிரிவினால் ஆறாத்துயருறும் அவரது குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம். [1266]

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சென்.ஜோசப் வித்தியாலயம்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 03 . 1935



மறைவு
02 . 07 . 2023

அமரர். கதிரவேலு கமலாவதி
(திதி-20.06.2024)

வந்தாருக்கு அன்னப் பூரணியாய்
திகழ்ந்தாய்...
ஈன்றவர்களுக்கு கர்ணனிற்கு ஒப்பாய்
திகழ்ந்தாய்...
பலருக்கும் வழிகாட்டும் திசையாய்
திகழ்ந்தாய்...
இன்று இறையடி சேர்ந்து எமக்கெல்லாம்
தெய்வமானாய்...

(நி-634)

நிருவத்தம்பை,
ஊரிக்காடு, வல்லெட்டித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

## 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் சிரார்த்த தின அஞ்சலியும்

அமரர்.
செல்வராசா தயானந்தன்

சிரார்த்த திதி - ஆனி மாத பூர்வ பக்ஷ திரயோதசி
(20.06.2024)

அகவை 60ல் 5ம் ஆண்டு
சிரார்த்த திதி வழிபாடு

மண்ணில்
05.02.1964

விண்ணில்
14.07.2019



(நி-633)

உன் நினைவுடனே வாழும்
பாசமுள்ள ஐயா
அன்பான உறவுகள்

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

---

## இராசிபலன்

20.06.2024
ஆனி 06, வியாழக்கிழமை
திரயோதசி முற்பகல் 7.34 மணிவரை

அனுசம் பிற்பகல் 6.20 மணிவரை
சுபநேரம் 7.24-8.54 மணிவரை
இராகுகாலம் 1.24-2.54 மணிவரை

சந்திராஷ்டமம்: ரேவதி, அச்சுவினி
நயினை நாகபூசணி தேர்

வளவன்

**மேஷம்** — வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**கடகம்** — மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** — புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய வாய்ப்புகள் தேடி வரலாம்.

**மகரம்** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** — உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**சிம்மம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்** — வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், சிந்தனை மிகுதியான நாள், பக்குவமாகச் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** — வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுற்றியிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**மீனம்** — தடைகள் விலகி தன வரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிரிகளை குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

கடவுளே மனிதனாகப் பிறந்தாலும் பணம் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் தேர் வடம் பிடிப்போம் அவள் மனதில் அழியா இடம் பிடிப்போம்


## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று தேர்

வட இலங்கையில் வரலாற்று மகிமையும், வழிபாட்டுச் சிறப்பையும் கொண்ட, நாற்புறமும் கடலால் சூழப் பெற்ற, சப்த தீவுகளில் மணிப்பல்லவம் எனப்படும் தனிப் பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள பதியே நயினையம்பதியாகும்.

சக்தி பீடங்கள் அறுபத்திநான்கினுள் புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படும் தனிச் சிறப்பை பெற்று அன்னையவள் விளங்குகின்றாள். அம்பிகையின் மூல விக்கிரகத்தின் தோற்றம், அதன் வரலாறும் இன்றும் கண்டறிய முடியாத அதிசயமாகக் காணப்படுகிறது.

நயினை நாகபூஷணி அம்மனின் அருளாசி தனிச் சிறப்பானது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ, நற்கருமங்களின் பொருள் பேசுவது, நம்பிக்கையுடன் வழிபாடு செய்யும் அடியவர்களது நோய் நொடிகள் அனைத்தையும் நீக்கி அருளும் சக்தியாகவும், குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறு அளிக்கின்ற பேரருள் சக்தியாகவும் அன்னை நாகபூஷணி அருளாசி புரிகிறாள்.

அன்னையின் ஆலய கிழக்கு வாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரம் கொண்டது.



ஆலயத்திற்கு அலை கடல் தாண்டி வரும் பக்தர்களின் பக்தியின் பரவசத்தை உவந்தளிக்கிறது. அண்மையில் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயம் முழுவதும் வர்ணங்கள் பூசப்பட்டு, புத்தெழுச்சியுடனும் பக்தி பூர்வமாகவும் காணப்படுகிறது.

### கருடன் கல் பாம்பு சுற்றிய கல் வரலாறு.

அனலைதீவுப் பகுதியில் இருந்து கடல் வழியாக நாகபாம்பு அம்மனுக்கு பூக் கொண்டு வந்த வேளை கருடன் பாம்பை இடை மறித்ததாகவும் நாக பாம்பு அருகில் உள்ள கல்லில் சுற்றிக் கொண்டாதகவும் கருடன் பக்கமாக உள்ள மற்றைய கல்லில் அமர்ந்து கொண்டதாகவும். அவ் வேளை வியாபார நோக்கத்திற்காக படகு மூலம் அவ் வழியால் வந்த வணிகச் செட்டியார் இக் காட்சிதனை நேரில் கண்டு, அம்மனை நோக்கி மனமுருகி வழிபாடு செய்ததாகவும், பின்பு கருடன் அவ்விடத்தை விட்டு பறந்து சென்றதாகவும் பின்னர் நாகம் பூக்களைக் கொண்டு சென்றதாகவும். வரலாறுகள் கூறி நிற்கின்றன.

ஆலய உற்சவ காலத்தில் பதினோராம் திருவிழா அன்று இக் கற்களுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றது. ஆலயத்தின் புராதன சின்னமாக இக் கற்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அன்னையின் அருளாசி

இவ்வாலயம் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து கூடுகின்ற இடமாகக் காணப்படுகிறது. இவ்வாலயத்தில் பக்தர்கள் தங்கி நின்று நாகதோச நிவர்த்தி, ஏனைய பரிகாரக் கிரிகைகள் செய்து வருகின்றார்கள். பௌர்ணமி தினங்களில் ஸ்ரீ சக்கர பூசை நடை பெறுகிறது.

இதில் திருமணமாகாத பெண்கள் தாலி பாக்கியம் வேண்டியும் திருமணமான பெண்கள் தாலி பாக்கியம் நிலைக்கவும் அம்பாளை வேண்டி வழிபாடு செய்வார்கள். ஆலயத்தில் நாகசாந்தி, நாகப் பிரதிட்சை, முடியிறக்குதல், குழந்தை களுக்கு அன்னமூட்டுதல், விற்று வாங்குதல் என்பனவும் ஆலய சிறப்பு நிகழ்வாகவுள்ளது.

இன்றைய தினம் அம்பிகையின் இரதோற்சவ நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு அவள் அருளாசியை நாடுவோம். தேர்வடம் பிடித்தால் மிகப் பெரிய புண்ணியம் கிட்டும். வடம் பிடித்தவர்கள் அம்பிகையின் திருவடியில் இடம் பிடித்தவர்கள் ஆவார்கள்.

தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தத்திருவிழா அருளலையும் குறிக்கும். எல்லோருக்கும் நயினை நாகபூஷணித்தாய் நல்லன எல்லாம் தந்தருளவும், நல்வாழ்வு என்னும்பெரும்பேற்றினைத் தந்தருளப் பிரார்த்திப்போம்.

**நயினை விசு-இராசநாயகம்**
(ஓய்வு நிலைத் தாதிய உத்தியோகத்தர்)


வெஸ்ரன் ஜுவல்லர்ஸ்

WESTERN Jewellers

எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு நயினை நாகபூசணி அம்பாளின் ஆசியும் அருளும் கிடைக்க இன்று இரதோற்சவம் காணும் அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

[சி-634]

No 81, Kasthuriyar Road, Jaffna.
021 222 6916, 076 658 0661
Tik Tok:@westernjewellerss



நயினை அம்மனின் தேர்வடம் பிடிப்போம்
தேவியின் அருளைப் பெற்றிடுவோம்

நயினாதீவை அருள் ஆட்சி புரியும் நயினை நாகபூசணி அம்பாளின் இரதோற்சவமாகிய இன்று எல்லோருக்கும் அம்பாளின் அருள் கடாட்சம் கிடைக்க வேண்டி நிற்கிறோம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
Poobalasingham Book Depot

பாடசாலை பாட புத்தகங்கள், சகல விதமான கொப்பி வகைகள், O/L-A/L மீட்டல் வினாவிடைப் புத்தகங்கள், ஆங்கில பாடப் புத்தகங்கள் மற்றும் அனைத்துப் பாடசாலை உபகரணங்களும் எம்மிடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

கிளைகள்

தலைமை
340,202.செட்டியார் தெரு, கொழும்பு-11
TP. No-2422321

இல.04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP. No- 021 222 6693

இல.212, 1 ஆம் குறுக்குத்தெரு, வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.
TP. No- 021 222 1637

இல.309 A, 2/3 காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06
TP. No-4515775

இல. 110, கொலண்ப்றோட், ஈஸ்ட்ஹம், லண்டன்.
Eb2EP UK
TP. No-02084704416

(C-638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

கடல் கடந்து உன் பாதம் தொழ வந்த எம்மை கை கொடுத்து காத்திடம்மா

## சிறீ மீனாட்சி நகை அகம்



Sree Meenakchi Nagai Aham

22 கரட் தங்கப்பவுண் நகை வியாபாரம்

22 KARAT GOLD JEWELLERY

T.P: 021 222 6109

இல. 177/B,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-642)

தாயே நயினைத் தாயே எம் குறை தீர்த்திடம்மா நீயே

## சித்தா றெஜிபோம் டிசைன்ஸ்

திருமணம்
மாதவன்
சிந்து

இலக்கம் 49 A
அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

(சி-641)

Phone:
075 039 4357, 075 5445901

அன்னையே அன்னபூரணியே
உம் கடைக் கண் கொண்டு
ஒரு முறை என்னைப் பாரம்மா

## மயூரன்ஸ் நகைமாளிகை



வேண்டும் வரம் தரும் தாயே
உனை நித்தம் தொழுவோம்
தாயின் அடியவர்களுக்கு
அருள் புரிய
வேண்டுகின்றோம்.



இல. 07, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-640)

077 651 0251

வேண்டும் வரம் தரும் தாயே உனை நித்தம் தொழுவோம் நாமே

## கிருபா லேணர்ஸ்

Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved
A Grade Driving Training School

### அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.



இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 4353, 021 492 3200, 077 722 5292

பருத்தித்துறை,
021 492 3201
071 454 6958

சாவகச்சேரி
021 492 3202
021 2270700

சுன்னாகம்
021 224 2022
071 454 6956

(சி-637)

விசுவமடு
021 320 1515
071 454 6955

கிளிநொச்சி
021 228 5505
071 454 6957

நெல்லியடி
021 300 6550
071 454 6957

இல. 216,
A9வீதி, வவுனியா.
(வசந்தி தியட்டருக்கு
முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விரைவில் மக்களை சந்திக்க திட்டமிடும் இளைய தளபதி



(சென்னை)

2026 சட்டமன்ற தேர்தலுக்கு ஆயத்தமாகும் வகையில் விஜய் விரைவில் மக்களை சந்திக்க திட்டமிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.


தமிழ்கம் முழுவதும் மக்கள் சந்திப்பு பயணங்கள் மூலம் விஜய் மக்களை சந்திக்க இருப்பதாக கூறப்படுகிறது. மேலும் கட்சியின் கொள்கை பற்றிய தகவல்கள் கட்சியின் முதல் மாநாட்டில் வெளியிடப்பட இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கனவே 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதில் மட்டுமே கவனம் செலுத்துவதாக தமிழக வெற்றிக் கழகம் அறிவித்து இருந்தது. இடையில் வரும் மற்ற தேர்தல்களில் தமிழக வெற்றிக் கழகம் போட்டியிடாது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

## அணு ஆயுதக் கையிருப்பில் 90 வீதமானவை அமெரிக்கா, ரஷ்யா வசம்

(ஸ்டாக்ஹோம்)

உலகின் ஒட்டுமொத்த அணு ஆயுத கையிருப்பில் சுமார் 90 சதவீதமான அணு ஆயுதங்களை ரஷ்யா மற்றும் அமெரிக்கா கொண்டுள்ளதாக ஆய்வறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுவீடன் நாட்டு நிறுவனமான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய ஒன்பது உலக நாடுகள் அணு ஆயுத சக்தியை கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் ஒப்பிடும் போது சீனாவின் வசமுள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சற்று குறைவு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஓராண்டில் உலக நாடுகளின் வசம் ஒட்டுமொத்தமாக அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 13 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் இதற்காக உலக நாடுகள் சுமார் 91.3 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலக அளவில் தற்போது 9,585 அணு ஆயுதங்கள் செயற்பாட்டிலுள்ளதாகவும் இதில் சீனாவிடம் மட்டும் சுமார் 500 அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு வடகொரியா முழுமையான ஆதரவு கிம் ஜாங் உன்



(பியாங்யாங்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை முழுமையாக ஆதரிப்பதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்த வேளை அவர் இதனை தெரிவித்துள்ளார். (நி-6)

## அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நர்கிஸ் முகமதிக்கு 1 வருடம் சிறை

(டெஹ்ரான்)

ஈரானில் கடந்த 1979 ஆம் ஆண்டு நடந்த இஸ்லாமிய புரட்சிக்குப் பின் அந் நாட்டில் இஸ்லாமிய சட்டங்கள் அமல்படுத்தத்பட்டு பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டது. இதை எதிர்த்து அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப் போது எதிர்ப்புக்குரல் எழுந்து வந்தது.



அப்படி அரசின் அடிப்படைவாதத்தை எதிர்த்து குரல் கொடுத்து வந்தவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் பெண்கள் ஹிஜாப் அணிய நிர்பந்திக்கப்படுவதற்கு எதிராகவும் அந்நாட்டின் மரண தண்டனைக்கு எதிராகவும் போராடிவந்த பெண் பத்திரிகையாளரும் சமூக செயற்பாட்டாளருமான நர்கிஸ் முகமதி கடந்த 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் உள்ள அவருக்கு கடந்த 2023 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது உலக அளவில் பேசு பொருளானது.

பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்த்து போராடி வருவதால் சிறையில் உள்ள அவருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனவே ஈரான் அரசு இதற்கு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தான் நர்கிஸ் முகமதி அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டும் வகையில் பிரச்சாரம் செய்த குற்றச்சாட்டிற்காக ஒரு வருட சிறை தண்டனை வித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## அசாமில் தொடரும் கனமழை 26 பேர் உயிரிழப்பு

(டில்லி)

அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் இடைவிடாது கடந்த 4 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கில் 15 மாவட்டங்களில் 1.61 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு இது வரை 26 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சன நெரிசல், வெப்பம் காரணமாக

# ஹஜ் யாத்திரைக்குச் சென்ற 550 பேர் உயிரிழப்பு!

**(ஜெத்தா)**

**இந்த ஆண்டு ஹஜ் யாத்திரையின் போது ஏற்பட்ட கடும் வெப்பம் மற்றும் நெரிசல் காரணமாக 550 யாத்திரிகர்கள் உயிரிழந்துள்ளதாக சவூதி அரசாங்கம் தெரிவித்துள்ளது.**



இறந்த 550 பேரில் 323 பேர் எகிப்தியர்கள் என்று கூறப்படுகிறதுடன் அவர்களில் பெரும்பாலானோர் நீர்ச்சத்து குறைவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடும் வெப்பமான காலநிலையில் யாத்திரிகர்கள் யாத்திரை மேற்கொள்ள முடியாமல் தவித்த நிலையில், அவர்களில் பலர் மயங்கி விழுந்து, மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது அவர்கள் உயிரிழந்ததாக சவுதி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

# சீன எச்சரிக்கையை மீறி தலாய் லாமாவை சந்தித்த

## அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள்

(டில்லி)

சீனாவின் எச்சரிக்கையையும் மீறி இந்தியா சென்றுள்ள அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் தரம்சாலாவில் உள்ள தலாய் லாமாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சீனாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட திபெத்திய ஆன்மிகத் தலைவரான தலாய் லாமா இமாச்சலப் பிரதேசத்தின் தரம்சாலாவில் தங்கி இருக்கிறார். 1959 இல் திபெத்தில் இருந்து தப்பி வந்த அவருக்கு இந்தியா அடைக்கலம் அளித்துள்ளது.

தலாய் லாமாவை சந்திக்க செல்வாக்கு மிக்க அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் 7 பேர் நேற்று தரம்சாலா சென்றனர்.

டெக்சாஸின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும் வெளியுறவு விவகாரங்களுக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவருமான மைக்கேல் மெக்கால் தலைமையிலான இக்குழுவில் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசியும் உள்ளார். தரம்சாலாவில் உள்ள தலாய்



லாமாவின் மடாலயத்திற்கு சென்ற அவர்களை பள்ளி குழந்தைகள் புத்த துறவிகள் மற்றும் பெண் துறவிகள் வரவேற்றனர்.

இதையடுத்து அமெரிக்க பாராளுமன்றக் குழுவினர் தலாய் லாமாவை நேற்று சந்தித்தனர். திபெத் பிரச்சினைக்குத் தீர்வு காண சீனாவுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் அமெரிக்கா இயற்றியுள்ள மசோதா ஜனாதிபதி ஜோ பைடனின் கையொப்பத்திற்காகக் காத்திருக்கும் நிலையில் அது தொடர்பாக தலாய் லாமாவுடன் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

தலாய் லாமாவை ஆபத்தான பிரிவினைவாதி என்று அழைக்கும் சீனா அமெரிக்க எம்.பிக்களின் இந்த பயணம் குறித்தும் மசோதா குறித்தும் ஆழ்ந்த கவலையை ஏற்கனவே வெளிப்படுத்தி இருந்தது. அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் தலாய் லாமாவை சந்திக்க வேண்டாம் என்றும் இந்த மசோதாவில் ஜனாதிபதி பைடன் கையெழுத்திடக் கூடாது என்றும் அது வலியுறுத்தியுள்ளது. (நி-6)

# மோதிக் கொண்ட

## சீன-பிலிப்பைன்ஸ் கப்பல்கள்



(பீஜிங்)

சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் மீது, சீன கடலோரக் காவல் படைக் கப்பல் மோதியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் தோமஸ் மணல்திட்டுப் பகுதியை நோக்கி கட்டுமானப் பொருட்களுடன் கடந்த திங்கட்கிழமை பயணித்த பிலிப்பைன்ஸ் கப்பலை, சீன கடலோரக் காவல் படைக் கப்பல் தடுத்து நிறுத்த முயற்சி செய்துள்ள நிலையில், இரு கப்பல்களும் மோதிக்கொண்டதாக சீன கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் பாதிப்புக்கள் குறித்து இது வரை எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், கப்பல்கள் மோதிக் கொண்டதை உறுதிப்படுத்தியுள்ள பிலிப்பைன்ஸ் வழக்கம்போல் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு தான் தங்களது கப்பல் சென்றதாக கூறியுள்ளது.

தென் சீன கடலின் ஏறத்தாழ அனைத்து பகுதிகளுக்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது.

இருந்தாலும் அந்தக் கடல் பகுதியில் தங்களுக்கும் உரிமையுள்ளதாக பிலிப்பின்ஸ், மலேசியா, மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் கூறிவருகின்றன.

இதன் காரணமாக அந்த நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே பதற்றம் நீடித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார் மகிந்த?

## அவரின் நெருங்கிய வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி அவர் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. அவரின் உடல்நிலை மற்றும் நாடு முழுவதும் பயணம் செய்யும் போது அரசியலில் ஈடுபடுவதில் உள்ள சிரமம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எதிர்வரும் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக அவர் தொடர்ந்து பாடுபடுவார் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (நி-6)

# சுற்றுலாத்துறையில் புறக்கணிக்கப்படும் வட-கிழக்கு

## சாணக்கியன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சுற்றுலாத்துறையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் மேலும் கருத்துத் தெரிவித்த சாணக்கியன், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுற்றுலா அபிவிருத்திகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதால் சுற்றுலா பயணிகளின் வருகை வட கிழக்கில் குறைவாக காணப்படுகின்றது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நிலத் தொடர்பினை ஏற்படுத்துவது, புகையிரத சேவையினை ஆரம்பிப்பது மிக முக்கிய விடயமாக உள்ளது.

ஏனெனில் தென்னிந்தியாவில் உள்ள எங்களது தமிழ் சகோதர மக்களில் குறிப்பிட்ட தொகையினர் இலங்கைக்கு வந்தால் வடக்கு, கிழக்கினை எம்மால் கட்டியெழுப்ப முடியும்.

ஆகவே அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சுற்றுலாப் பயணிகள் மூலமாக வருமான மீட்டுவதற்கான வழியினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென தொடர்ச்சியாக கூறக் காரணம் நாங்களே எங்களது பிரதேசங்களை கட்டியெழுப்ப முடியும் என்பதால் தான்.

ஜனாதிபதிக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்க வேண்டுமாயின் அவர் தமிழ் மக்களுக்கு கூறும் சில விடயங்களையாவது செய்ய வேண்டும்.

இவற்றினை மேற்கொள்ளாது செயற்படுவதனால் தமிழ் மக்களை ஏமாற்றுவதனையே தனது நோக்கமாக கொண்டுள்ளார் என்பதனையே நாங்கள் எண்ண முடியும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# வாக்காளர் எண்ணிக்கை 2 இலட்சத்தினால் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது வாக்காளர் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தினால் அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை 2024 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி இறுதி பட்டியல் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட உள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு வாக்காளர் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் இரண்டு இலட்சம் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 17ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு என தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி ஜூலை மாத இறுதியில் ஜனாதிபதித்தேர்தல் குறித்த வர்த்தமானி அறிவித்தல் அநேகமாக வெளியிடப்படும் என தெற்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

## முத்திரையின் விலையை 100 ரூபாவாக அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

தபால் முத்திரை ஒன்றின் விலையை 100 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

அத்தோடு இதனை நடைமுறைபடுத்துவதற்காக திறைசேரி அனுமதிக்காக காத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு வரை 15 ரூபாவாக இருந்த முத்திரையின் விலை தற்போது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் அஞ்சல் திணைக்களம் தொடர்ச்சியாக நஷ்டம் அடைந்து வருவதனால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். (நி-6)

## நடைமுறைக்கு வரவுள்ள புதிய வரிகள்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் அண்மைய அறிக்கைக்கு அமைய அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் தொடர்ச்சியான வரி மாற்றங்கள் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பான இரண்டாவது மதிப்பாய்வை அடுத்து சர்வதேச நாணய நிதியம் பல முக்கிய வரி சீர்திருத்தங்களை முன்வைத்துள்ளது.

இதற்கமைய டிஜிட்டல் சேவையுடன் தொடர்புபட்ட துறைகளிற்கும் பெறுமதி சேர் வரியை அறவிடுதலும், ஏற்றுமதி சேவைகளிற்கு தற்போது விதிக்கப்படும் வருமான வரியில் விலக்களிக்கப்படுவதும் முக்கிய திருத்தங்களாக கூறப்படுகின்றது.

மேலும் விற்பனைச் செயற்பாடுகளுக்கு அறவிடப்படும் சமூக பாதுகாப்பு வரிக்கு பதிலாக பெறுமதி சேர் வரியும்அறவிடப்படக் கூடும்.

இதேவேளை மதுபானம், புகையிலை மற்றும் விளையாட்டு நிறுவனங்களுக்கு அறவிடப்படும் வர்த்தக வருமான வரி 40 சதவீதத்தில் இருந்து 45 சதவீதமாக அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைக்கு அமைய, இவ்வாறான பல புதிய வரிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறையாகும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இன்று ஒரு தகவல் 158



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதி.

ஒரு பெரிய கூட்டம். இயேசு நாதர் பேசிக் கொண்டிருந்தார். அப்போது பிரம்மாண்டமான துலாக்கோல் ஒன்றை அந்த ஜனங்களுக்குக் காட்டினார். அது மாதிரி ஒரு தராசை அந்த மக்கள் பார்த்ததே இல்லை. அவ்வளவு பெரிய தராசு. இந்த உலகில் உள்ள எல்லாவற்றையும் அந்தத் தராசில் வைத்து எடை போடுகிறார் அவர். அந்த பெரிய தராசு ஆகாயத்தில் இருந்து தொங்க விட்டது போல் இருந்தது.

அந்தத் தராசில் ஒரு பக்கத்துத் தட்டில் அந்த யூதேயா மலைப்பகுதியில் கண்ணிற்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் எடுத்து வைக்கிறார். மலைச்சாரலில் வளர்ந்து இருக்கின்ற ஆலீவ் மரங்களை எல்லாம் எடுத்து அதிலே வைக்கின்றார். மலையடி வாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆட்டு மந்தைகளை எல்லாம் அதில் தூக்கி வைக்கிறார். அது வரைக்கும் தோண்டி எடுக்கப்பட்ட தங்கத்தை எல்லாம் அங்கே வைக்கிறார். உலகத்தில் உள்ள விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் வைக்கிறார். இவ்வளவும் இடது பக்கத் தட்டில் வைக்கிறார். மக்கள் எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"இன்னொரு தட்டில் வைப்பதற்கு மீதி எதுவும் இல்லையே!" என்று அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் ஒரு பக்கத் தட்டில் வைத்து விட்டார். அவ்வளவையும் ஈடு செய்கின்ற அளவுக்கு அடுத்த பக்கத்துத் தட்டில் எதை வைக்க முடியும்? எல்லோரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இயேசு நாதர் சுற்றும் முற்றும் பார்க்கிறார். அங்கே பக்கத்தில் இருந்த சிறிய குழந்தையை எடுத்து வலது பக்கத் தட்டில் வைக்கிறார். அவ்வளவு தான். இடது பக்கத் தட்டு ஆட ஆரம்பித்தது. மிக உயரத்திற்குப் போய் விட்டது. அதில் இருந்த பொருட்கள் எல்லாம் கீழே விழுந்து விடுமோ என்று நினைக்கின்ற அளவிற்கு ஆகிவிட்டது. எல்லோரும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமானின் முகத்தைப் பார்கிறார்கள்.

அவர் கூறினார்: "ஒருவன் தன் ஆன்மாவிற்கு கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்?" (மாற்கு 8:36-37) என்றார்.

இந்த சம்பவத்திலிருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டியது என்ன? இந்த உலகில் உள்ள எல்லாவற்றையும் விட அதிக விலை உடையது எது என்று கேட்டால் அது மனிதனின் ஆன்மா தான் என்பதை இந்தச் சம்பவத்தினூடாக அவர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

இன்றைக்கு நாம் படுகின்ற கவலைகளுக்கெல்லாம் எது காரணம் என்று நினைக்கின்றீர்கள்? மனிதனது மதிப்பை மனிதன் இன்னமும் முழுசாகப் புரிந்து கொள்ளவில்லை. அது தான் காரணம். இப்போது எல்லாம் உலகத்தில் அங்கே இங்கே நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால் மனிதனது உயிர் மிகவும் மலிவாகப் போய் விட்டது என்கின்ற நினைப்புத்தான் வருகின்றது.

சமீபத்தில் ஒரு பத்திரிகையிலே ஒரு நகைச்சுவையான துணுக்குப் பார்த்தேன். ஒரு ராஜா காட்டிற்கு வேட்டைக்கு சென்று திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது அவருடன் வந்து கொண்டிருந்தவர்களிடம் விசாரிக்கிறார்:

"அமைச்சர் இருக்கிறாரா?" என்றார் ராஜா.

"இதோ இருக்கிறேன்!" என்றார் அமைச்சர்.

"சேவகர் இருக்கிறாரா?" என்றார்.

"இதோ இருக்கிறேன்!" என்றார் அவர்.

"தளபதி இருக்கிறாரா?" என்றார்.

"இருக்கிறேன்!" என்றார் தளபதி

"அப்பாடா! அப்படி என்றால் நான் சுட்டது கரடியைத் தான்!" என்றார் ராஜா. மனிதர்களின் உயிர் மேல் மன்னனுக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவியடி விநாயகருக்கு இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து வீரகத்தி விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வந்து காலை 8.30 மணிக்கு தேரில் ஆரோகணித்து வெளிவீதி வலம் வரும் காட்சி இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் அன்று மாலை கொடியிறக்க வைபவமும் இடம் பெறும். (நி-6)



# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேர் வடம்பிடித்து சித்தி முதல் முத்தி நலம் பெறுவோம்

**சித்தியும் சித்திதரும் தெய்வமாகித் திகழும் பரா**
**சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்**
**முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகிமுளைத்தெழுந்த**
**புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே**
***அபிராமி அந்தாதி-29***

தம்மைத் தஞ்சமாயடைந்தவர்களுக்கு அருள் செய்யும் வீரசக்தியாகிய அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஓர் தேரிலும்,அடியவர்களுக்கு வருகின்ற துன்பங்களை நீக்கியருளுகின்ற பிள்ளையார் ஓர் தேரிலும், வள்ளி நாயகியாருக்கும் தெய்வ நாயகியாருக்கும் தலைவனாகிய அருள் மிகு முருகன் ஒரு தேரின் மேலும் ஏறி, **விண்ணிலுள்ள தேவர்கள் களிப்படைந்து** அன்பே உருவான தாயின் திருவடிகளில் பூக்களை மழை போலச் சொரிந்து ஆரவாரித்து வணங்க, மண்ணிலுள்ள மக்கள் கண்கள் இரண்டும் காட்சியிற் கலந்து நிறைவான களிப்பிலே அழகிய வீதி வலமாகச் சுற்றி வருவார்.

அபிராமிப்பட்டர் 29 ஆவது அருள்வாக்காகிய அருள்மிகு ஸ்ரீவீரமாகாளித்தாயே!

நின் திருவடிக்கு எம்மை ஆளும் அருள் உண்டு.

தாயே! உன்னுடைய கடைக்கண் பார்வைக்கு சகல துன்பங்களில் இருந்தும் , எமனிடமிருந்து மீட்சியும், சித்தி முதல் முத்தியும், உனது பேரருளும், மன நலமும் உண்டு தாயே!

அம்மா தாயே! சக்தி தழைக்கும் சிவமும் திரிபுரையே முக்திவடிவினள் **"முக்திரூபா"** போற்றும் விதையாக இருப்பவளாகவும், அந்த வித்தாகி அதனின்று முளைத் தெழுந்த மெய் ஞானமாகிய புத்தியும் அப்புத்தியின் உள்ளே. நின்று நம்மைக் காப்பவளும் புரத்தையாகிய அம்பிகையே ஆகும்.

எங்கள் அருள்மிகு வீரமாகாளி அம்மா தாயே நின் பொற்பதம் பிடித்தோம், அருள்மிகு அம்பிகை தேர் வடம் பிடித்து அபிராமி அந்தாதி, திருவாசகம், திருமுறைகளும் ஓதி அல்லல்படும் துன்பமும் துயரமும், பிறவிப் பிணியையும் நீக்கி அருள் புரியம்மா தாயே!

**அநாதியாகவே ஆணவ மல பந்தத்தால்**
**அறிவு முடங்கிய**
**உயிரினத்தைக் கட்டு நீக்கிப் பிறவிப் பெருங்கடலில்**
**கரை ஏற்றுவதே அம்மாவின் பேரருள் உள்ளம்**
**வீரகாளித்தாயே திருவடிகளுக்குச் சரணம் தாயே.**

**க.கு.க.சிவபாலன்**

(சி-631)

## வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்(வ-து),கிளிநொச்சி.
## பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

எமது வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி : பொது முகாமையாளர் 101/02**
**2. சம்பள குறியீட்டு இல. : 101/02 ( சுற்று நிருப இல. 01/2021 )**
**3. சம்பள அளவுத் திட்டம் :- 27580.00 - 520.00 X 10 - 555.00 X 10 - 38330.00**

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய இதரப் படிகளும் வழங்கப்படும்.

**4. தகைமைகள் :-**

அ) கூட்டுறவு ஊழியர் 3 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 4 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச்சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல் வியாபாரப் புள்ளிவிபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/ இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. **அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம் / க.பொ.த.உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 11 ஆண்டு கால அனுபவம்.

**5. பொதுவான நிபந்தனைகள்**

1. வயதெல்லை 18 - 45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.
3. தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
5. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ்கள், பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**6. விண்ணப்பிக்கும் முறை**

- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை தலைவர், வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 155 ஆம் கட்டை, A 9 சாலை, கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவே சமர்ப்பிக்க வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**7. விண்ணப்ப முடிவு திகதி :- 2024.07.15**

(சி-636)

**தலைவர்,**
**வட மாகாண பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,**
**கிளிநொச்சி. (2024.06.20)**

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக யாழில் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

யாழ். ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதை கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் யாழ்.பிரதான பேருந்து நிலையம் முன்பாக நேற்றுக் காலை 10 மணி அளவில் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூகவியலாளர்கள், புத்திஜீவிகள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என அதிகளவானோர் கலந்து கொண்டனர்.இதன் போது போராட்டக்காரர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பதாகைகளைத் தாங்கியவாறு கோஷம் எழுப்பி தமது கண்டனத்தை வெளியிட்டனர்.இதன் போது ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையில் இலங்கையில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பிலே நீதி கண்டறியப்பட வேண்டும் என வலியுறுத்திய அறிக்கையில் அனைவரின் கையெழுத்துக்களும் பெறப்பட்டு ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கும் யாழில் இயங்கி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33-60)



வளரும் நாடுகளிற்கு சமூக வளர்ச்சி மற்றும் வறுமைக்குறைப்பு தொடர்பான அனுபவப் பகிர்வு பயிற்சி நெறி சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நேற்று ஆரம்பமானது.இதில் யாழ்.நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ரஜீபன் கலந்து கொள்கிறார். இந் நிகழ்வு ஜீன் மாதம் 3 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 512





"நிச்சயம் இல்லை ஆனால் அப்பேர்ப்பட்ட சுழற் காற்றில் கடலில் குதித்தவர் பிழைத்திருப்பது அசாத்தியம்! விதியின் போக்குக்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்றான் பல்லவன்.

"இதற்கு விதி காரணம் இல்லை அந்தப் பழையாறை ராட்சஸியின் பேராசை தான் காரணம். தங்களுக்குத் தெரியுமா ஐயா? குந்தவை தேவிக்குச் சோதிடத்திலும் ரேகை சாஸ்திரத்திலும் அபார நம்பிக்கை. தம்பியின் ஜாதகத்தையும், கை ரேகையையும் பார்த்து வைத்துக் கொண்டு அவன் மூன்று உலகையும் ஆளும் சக்கரவர்த்தியாகப் போகிறான் என்று நம்பிக்கை வைத்திருந்தாள். ஐயோ! பாவம்! அந்த அருமைத் தம்பிக்கு இந்த கதி நேர்ந்தது என்று அறியும் போது அவள் எவ்வளவு கஷ்டம் அடைவாள்? அச் சமயம் நான் அவள் கூட இருந்து ஆறுதல் சொல்ல வேண்டும் போலிருக்கிறது!"

இவ்விதம் கூறிய நந்தினியின் குரலில் குதூகலம் தொனித்தது. பல்லவன் ஒருகணம் ஆச்சரியப்பட்டுப் போனான். பிறகு தன் செவிகளில் தான் கோளாறு என்று தீர்மானித்துக் கொண்டான்.

"ராணி தாங்கள் எதற்காக ஆறுதல் சொல்ல வேண்டும்? அவளுடைய பேராசையினால் நேர்ந்து விட்ட விபரீதம் தானே இது? அதற்காக அவள் கஷ்டப்பட வேண்டியது தான்"

"அது எப்படி ஐயா? அவள் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர் துளித்தால், நெஞ்சு பதறுகிறவர்கள் சோழ நாட்டில் ஆயிரம் பதினாயிரம் பேர் இருக்கிறார்கள். அவள் சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வி மூன்று உலகிலும் ஈடு இணையற்ற அழகி!"

"நானும் ஒரு சமயம் அவ்வாறு தான் நினைத்திருந்தேன்! அதாவது, தங்களைப் பார்ப்பதற்கு முன்னால்!"

"என்னைப் பார்த்த பிறகு என்ன நினைக்கிறீர்கள்?"

"குந்தவை தேவியின் அழகு தங்கள் பாதச் சுண்டு விரலின் அழகுக்கு இணையாகாது என்று தான்."

"இப்போது இப்படித்தான் சொல்வீர்கள். நாளைக்கு அவளைப் பார்த்தால் நான் ஒருத்தி இவ்வுலகில் இருக்கிறேன் என்பதையே மறந்து விடுவீர்கள்!"

"ஒரு நாளும் மாட்டேன். தேவி! என்னைச் சோதனை செய்து பாருங்கள் என்று தான் சொல்லுகிறேனே? தங்கள் கட்டளை இன்னதென்று இக்கணமே தெரிவியுங்கள்."

"கட்டளையிடும் பாத்தியதை எனக்குக் கிடையாது. ஐயா! விண்ணப்பம் செய்து கொள்கிறேன். பெரிய பழுவேட்டரையரை நான் மணந்த பிறகு சோழ நாட்டில் பிளவும், குழப்பமும் ஏற்பட்டிருப்பதாகச் சிலர் அவதூறு சொல்கிறார்கள். அது பொய் என்பதை நிரூபிக்க விரும்புகிறேன். அதற்குத்தான் தங்கள் உதவியை நாடுகிறேன்."

பார்த்திபேந்திரன் சிறிது ஏமாற்றம் அடைந்தான். நந்தினி, அவளுக்காக ஏதோ ஒரு கஷ்டமான காரியத்தில் தன்னை ஏவுவாள் என்று எண்ணியிருந்தான். அதை நிறைவேற்றி அவளை மகிழ்விக்க ஆர்வம் கொண்டிருந்தான். ஆனால் அவள் இராஜ்ய காரியத்தைப் பற்றி எதுவோ சொல்லுகிறாள்!

"சொல்லுங்கள் ராணி! தங்கள் விருப்பம் எதுவாயிருந்தாலும் சொல்லுங்கள்!" என்றான்.

"ஐயா! சோழநாட்டில் அமைதி ஏற்படாமல் தடுத்து வந்தவள் இளைய பிராட்டி.

(தொடரும்)




# சிறுவர் அரங்கம்

## பொய் சாட்சி சொல் கூடாது

ஓர் ஊரில் நல்லரசன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயருக்கு தகுந்தார் போல் நற்குணங்கள் பெற்றவனாக இருந்தான். ஏழை எளியவர் களிடம் அன்பு காட்டும் குணமும் மற்றவர்களுக்கு உதவும் உயர்ந்த மனப்பான்மை அவனிடம் இருந்தன.

யாராவது தவறு செய்தால் அதனை தட்டிக் கேட்கும் துணிவும் அவனிடம் இருந்தது. அதனால், அந்த ஊர் மக்கள் நல்லரசன் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த ஊரில் வசதியாக வாழ்ந்து வந்த சிலர் நல்லரசனின் செல்வாக்குகண்டு அவர் மீது பொறாமை கொண்டனர்.

அவர் புகழை கெடுப்பதற்கு தங்களால் முயன்ற



முயற்சிகளை எல்லாம் செய்தார்கள். ஆனால், அவர்களுடைய முயற்சிகள் யாவும் தோல்வியிலே முடிந்தன. பணக்காரர்கள் ஆகிய தங்கவேலும், கருப்பு சாமியும் இதனால் மனம் புழுங்கினர்.

ஏதேனும் ஒரு செயல் செய்த நல்லரசனை அவமானப்படுத்த வேண்டும் என்று துடியாய் துடித்தனர். அந்த பணக்காரர்களுக்கு நல்லரசன் எந்த தீங்குமே செய்யவில்லை. ஆனால், கோயில் திருவிழாவாக இருந்தாலும், வேறு பொது செயல்களாக இருந்தாலும் அந்த நல்ல அரசனுக்கே அனைவரும் முதல் மரியாதை கொடுத்தார்கள். இதைத் தான் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எப்படியாவது அந்த நல்லரசனை பழிவாங்க வேண்டும் என்று கங்கணம் கட்டி அவர்கள் அந்த ஊரில் வசித்து வந்து முனியாண்டி என்பவனை அழைத்து பேசினார்கள். அந்த முனியாண்டிக்கு ஊர் மக்களிடம் நல்ல பெயர் இருந்தது. அவனை பகடைக் காயாய் பயன்படுத்தி அந்த வல்லரசனை வீழ்த்தி விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள்.

தங்கவேலும், கருப்பு சாமியும் ஒன்று சேர்ந்து சதித்திட்டம் ஒன்றை தீட்டினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் இரண்டும் நான்குதான்: அதையும் கூட ஒருமுறைக்கு இருமுறை சரி பார்த்துச் சொல்லுங்கள்.
– *விட்டன் பர்க்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதுத் தலைப்பிடுகிறார் அநுர குமார திசாநாயக்க

**தலையங்கம்** என்பது நம் தமிழ் மொழியில் மிகவும் முக்கியமான சொற்பதம்.

அதிலும் பத்திரிகை என்று வரும்போது ஆசிரியர் தலையங்கம் என்பது பத்திரிகைகளின் மகுடமாக அமைகிறது.

இதனையும் கடந்து, செய்திகளுக்கு இடப்படுகின்ற செய்தித் தலையங்கம் வாசகர்களைக் கவர்ந்திழுக்கவல்லவை. இதனை இன்னமும் சுருக்கமாகக் கூறுவதாயின், தலையங்கம் என்பது பத்திரிகைகளின் தலைவாசல் என்று கூறலாம்.

அதேநேரம் பத்திரிகைகள் தத்தம் வாசகர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செய்தித் தலைப்பிடுகின்ற பணியையும் செய்கின்றன.

இதனைத் தெளிவுபடுத்துவதற்காகப் பத்திரிகைத் தலைப்புத் தொடர்பில் ஓர் உதாரணத்தை முன்வைக்கலாம்.

சர்வதேச ஓட்டப்பந்தயமொன்றில் அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் பங்குபற்றினர்.

இரண்டு பேர் மட்டும் பங்குபற்றிய அந்த ஓட்டப் போட்டியில், அமெரிக்க வீரர் முதலிடத்தையும் ரஷ்ய வீரர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைச் செய்தியாக்கிய அமெரிக்கப் பத்திரிகை; சர்வதேச ஓட்டப் போட்டியில் அமெரிக்காவுக்கு முதலிடம். ரஷ்யா கடைசி இடத்தையே பெற்றுக் கொண்டது எனச் செய்தித் தலைப்பிட்டது.

அதேநேரம் ரஷ்யப் பத்திரிகையொன்று குறித்த செய்திக்கு; சர்வதேச ஓட்டப் போட்டியில் ரஷ்யாவுக்கு இரண்டாம் இடம். அமெரிக்கா கடைசிக்கு முதல் இடத்தையே பெற்றுக் கொண்டது எனத் தலைப்பிட்டது.

ஒரே செய்தி. ஆனால் இரண்டு வெவ்வேறு நாட்டுப் பத்திரிகைகள் தத்தம் சூழ்நிலைக்கேற்ப செய்தித் தலைப்பை மாற்றியமைத்துக் கொண்டன.

இதை நாம் கூறுவதற்குக் காரணம், லண்டனுக்குச் சென்ற அநுர குமார திசாநாயக்க அங்கு ஆற்றிய உரையாகும்.

ஆம், பௌத்தத்தில் கை வைக்கத் தமிழ்த் தலைவர்களுக்கு உரிமையில்லை என லண்டனில் ஆற்றிய உரையின்போது அநுர குமார திசாநாயக்க கூறியுள்ளார்.

இங்குதான் அநுர குமார திசாநாயக்க புதுத் தலையங்கம் இடுவதைக் காண முடிகிறது.

அதாவது இலங்கையில் இருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயங்களை பௌத்த சிங்களப் பேரினவாதம் ஆக்கிரமிப்புச் செய்து வருகிறது.

இதனை இருட்டடிப்புச் செய்வதற்காக; பௌத்தத்தில் தமிழ்த் தலைவர்கள் கைவைக்க முடியாது என அநுர குமார திசாநாயக்க கூறியுள்ளார்.

ஆக, அநுர குமார திசாநாயக்கவின் மேற்போந்த உரையின் உள்ளார்ந்தம், வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயங்கள் பௌத்தத்துக்குரியதென உணர்த்துவதாகும்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

(சென்னை)

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இழுவைமடிப்படகில் மீன் பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு அவர்களது மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைப்பதோடு மட்டுமல்லாமல் மீனவ சமுதாயத்தினரிடையே அச்ச உணர்வையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்துவதாகவும் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் தற்போது 15 மீனவர்களும் 162 மீன்பிடிப் படகுகளும் உள்ளதாக கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசை வலியுறுத்த வேண்டுமென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-7,10)

# பாலின சமத்துவ சட்டமூலம் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## விமல் வீரவன்ச எம்.பி

பாலின சமத்துவம் தொடர்பான சட்டமூலம் நாட்டில், அமுல் படுத்தப்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பாலின சமத்துவம் தொடர்பான சட்டமூலம் நாட்டில் அமுல் படுத்தப்பட்டால் ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாக்வும் மாற்ற முடியும். இந்த வகையான ஒரு நடவடிக்கை இன்று நாட்டில் பாரிய வர்த்தகமாக தோற்றம் பெற்றுள்ளது.

இந்த சட்டமூலத்தை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். வெளிநாடுகளில் பெற்றோர்களின் அனுமதி இன்றி.சிறுவர்களிடம் சிறுமியாக மாற விருப்பமா அல் லது சிறுமிகளிடம் சிறுவ னாக மாற விருப்பமா என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஆணை பெண்ணாக்குவதற்கு 4 ஆயிரம் டொலர் வசூலிக்கப்படுகின்றது.

இது மிகப்பெரிய வர்த்தகமாக இன்று உருவெடுத்துள்ளது. இந்த நாடு பௌத்த மதத்தோடு பின்னிப்பிணைந்த நாடு.

எமக்கு எந்தவொரு வெளிநாட்டு சக்திகளும் இது தொடர்பாக விளக்கம் தரவேண்டிய அவசியம் இல்லை. இந்தச் சட்டமூலத்தின் ஊடாக ஆரோக்கியமாக உள்ள ஒரு ஆணை பெண்ணாக மாற்ற முடியும்.

எனவே இதனை நாம் எதிர்க்கின்றோம். இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் வாக்களிக்கின்ற அனைத்து ஆண்களும் பெண்ணாக மாறுவதற்கு தயார் என்ற செய்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும் இவ்வாறு விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ம-7,10)

# யாழில் மீனவர்களுக்கு இறங்குதுறை அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பொலிகண்டியில் இறங்குதுறை அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் இழுவைமடி கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பொலிகண்டியில் மீன்பிடி கப்பல்களை நங்கூரமிடுவதற்கான இறங்குதுறை ஒன்று இல்லை.

இந்தப் பகுதியில் அதிகளவான மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொண்டுவருகின்ற நிலையில் நீண்டகாலமாக குறித்த பகுதியில் படகுகளை நங்கூரமிடுவதற்கான இடமொன்று இல்லை. இந்த விடயம் தொடர்பாக உரியதரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும் ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களை நங்கூரமிடுவதற்கான இறங்குதுறைகளை அமைத்துகொடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

யாழ்., மாவட்டத்தின் சில இடங்களில் இழுவை மடி கடற்றொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரியவந்துள்ளது. குறிப்பாக இந்த விடயம் தொடர்பாக மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள் கரிசனை கொள்ளாது செயற்படுகின்றனர்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்படையச் செய்வது எமது நோக்கமல்ல. இழுவைமடி கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (ம-7,10)

# நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை கும்பாபிஷேக தினம்

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவ தெட்சணாமூர்த்தி ஆலய கும்பாபிஷேக தினம்.

இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெறவுள்ளது. விசேட சங்காபிஷேகம் நடைபெற்று அன்னதானமும் நடைபெறவுள்ளதாக சிவபூமி அறக்கட்டளையினர் அறிவித்துள்ளனர். (ம-7,10)

# செல்வ நாகபூசணிக்கு இன்று தேர்

(கந்தர்மடம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவந்தனில் இன்று வியாழக்கிழமை இரதோற்சவம் இடம் பெறவுள்ளது.

காலை 05 மணியளவில் விஷேட அபிஷேகங்கள் இடம்பெற்று காலை 07 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம் பெற்று எம்பெருமாட்டி 08 மணியளவில் இரதத்தில் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார். (ம-7,10)

### பாடசாலை பேருந்து விபத்து

# மாணவர்கள் உட்பட 30 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு - அவிசாவளை வீதியில் ரணால பிரதேசத்தில் தனியார் பேருந்தொன்றும் மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்தொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் மாணவர்கள் உட்பட 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து லபுகமுவ நோக்கி மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தும், எம்பிலிபிட்டியவில் இருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக நவகமுவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரை நியமிக்க கோரி பெற்றோர்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பாடசாலை அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பாடசாலை வாயில் முன்பாக பெற்றோர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு அரசினர் தமிழ்கலவன் வித்தியாலயத்திற்கு கடந்த 8 மாதங்களாக அதிபர் இல்லாமலே இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையில் 57 மாணவர்கள் கற்கின்றனர். இதனால் மாணவர்களின் கல்வி செயற்பாடு பாதிக்கப்படுவது தொடர்பில் வலயக்கல்வி பணிமனையில் முறையிட்டிருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் நிரந்தரமான அதிபரை நியமிக்குமாறும் அதனை எழுத்து வடிவில் ஆவணமாக தரும்வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என கூறி பாடசாலை நுழைவாயிலை மறித்து பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் பெற்றோருடன் கலந்துரையாடி வீதியில் நின்ற ஆசிரியர்களை பாடசாலைக்குள் அனுப்பியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்த வலயக்கல்வி பணிப்பாளர் இ.தமிழ்மாறன், பொலிஸார், பாடசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்களுக்கிடையில் பாடசாலை வளாகத்திற்குள் குறிப்பிட்ட சிலருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கலந்துரையாடலில் ஈடுபட்ட பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில் இதுவரை எமக்கான நிரந்தர அதிபர் கிடைக்கும் என உறுதி மொழி வலயத்திலிருந்து வரவில்லை எனவும் ஆனால் இவ்விடயம் தொடர்பில் முயற்சி செய்வதாக கூறி இருக்கின்றார்கள். இதனையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

# மட்டுப்படுத்தப்பட்டுள்ள குடிநீர் விநியோகம்

## நெருக்கடியில் மக்கள்

(யாழ்ப்பாணம்)


காரைநகர் பகுதிக்கான நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு அல்லல்பட்டு வருகின்றனர். அதனால் தண்ணீர் பவுசரை பொலிஸார் விரைவில் நீதிமன்றில் பாரப்படுத்தி வாகனத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபைக்கு சொந்தமான தண்ணீர் பவுசர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ் நோக்கி வந்த போது கல்லுண்டாய் பகுதியில் முச்சக்கர வண்டியுடன் விபத்துக்கு உள்ளானது. விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார் விபத்துக்கு உள்ளான வாகனங்கள் இரண்டையும் பொலிஸ் நிலையம் எடுத்து சென்றதுடன் பவுசர் சாரதியையும் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதி பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில், தண்ணீர் பவுசர் பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# கண்ணீர் அஞ்சலி



யா/சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில்
விசேட கல்வி ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி.**கமலவாஜினி சுதர்சன்**
அவர்களின் பாசமிகு தந்தை
அமரர். **மகாலிங்கம் சேனாதிராசா**
அவர்கள் 2024.06.01 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (சி-635)

**யாழ்.கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் மற்றும் விசேட கல்வி ஆசிரியர்கள்.**

# மரண அறிவித்தல்


## அமரர்.இறப்பியல் பெர்னான்டோ (குணம்)

*யாழ்ப்பாணம், 4 ஆம் கட்டை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியல் பெர்னான்டோ (குணம்)அவர்கள் 17.06.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான இறப்பியல் அடைக்கலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜோசப்பு பிரகாசியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் றெஜினா அவர்களின் பாசமிகு கணவரும் பிலோமினா அவர்களின் அன்புச் சகோதரரும், ஜெயசீலி (கனடா),காலஞ்சென்ற லீமா,சுரேஷ்சந்திரபோஷ் (கனடா), குமுதினி (லண்டன்), விக்டோரியன் சதீஸ்குமார் (சுவிட்சர்லாந்து), அன்ரனி சாள்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரன் ஞானரட்ணம் (கனடா), கஜேந்தினி(கனடா), ஆனந்தன்(லண்டன்), நிர்மலா (சுவிட்சர்லாந்து) அவர்களின் பாசமிகு மாமனாரும், வினோஜா (கனடா), வினிற்றா(கனடா), டெனிசியா(கனடா), மொறிஷா(கனடா), ஆர்மிலா(கனடா), எய்டன் (கனடா), பிறைடன் (கனடா), ஜோடன் (கனடா), சோபியா(லண்டன்), செரோன் (லண்டன்), சிகோன் (லண்டன்), சிமோன்(சுவிட்சர்லாந்து), சிமோரா (சுவிட்சர்லாந்து) அவர்களின் பாசமிகு பேரனும், அர்வின் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் 21.06.2024 நாளை வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இருந்து மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு காலை 9 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு புனித சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*



**மலர்வு 05.07.1949**

**உதிர்வு 17.06.2024**

**4ம் கட்டை, ஆனைக்கோட்டை.**

**தகவல், குடும்பத்தினர்.**

(0099)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினைத்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

7 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு அம்பாள் சித்திரத் தேரில் வலம் வருவார். (ம-7,10)

## கசிப்புடன்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கையானது நேற்று இடம்பெற்றுள்ளது.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தவேளை சுன்னாகம் பொலிஸார் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான கோடா மற்றும் 6000 மில்லிலீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## அரகலய...

வீரசேகர அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களிற்கு இடையிலான முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, முன்னணி சோசலிச கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சட்டத்தரணி நுவான்போபகே, ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர மற்றும் இடதுசாரி கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த புதிய அரசியல் இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். (ம-7,10)

## மோ.சைக்கிள்...

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் நீர்வேலிப் பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த வேதலன் கவிப்பிரியன் (வயது-16) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-7,10,60)

## அகழ்வாராய்ச்சிப்...

யில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு பகுதியில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்களான இரகுபதி மற்றும் இந்திரபாலா ஆகியோர் 1980 ஆம் ஆண்டுகளில் முன்னெடுத்த அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் இது பெருங்கற்காலப் பண்பாடு என உறுதிப்படுத்தும் வகையில் சான்றுப் பொருட்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இந்த நிலையில் புலம்பெயர் நிதிப் பங்களிப்புடன் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், தென்னிலங்கை தொல்லியல் துறை பேராசிரியர்கள், யாழ்.பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், தொல்லியல் பணிமனை அதிகாரிகள், யாழ்ப்பாண மரபுரிமை மையம் இந்த அகழ்வுகளில் பங்கெடுக்கவுள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தெரிவித்தார். (ம-7,10)

## கடன் வழங்கும்...

யிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற சர்வதேச தொழில் கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடன் வழங்கும் நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பான விபரங்களை வழங்கும்போது ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்

களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பசுமைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு புதிய நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளன. (ம-7,10)

## நாடு முழுவதும்...

வித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 23 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 02 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 119 கிராம் ஹெரோயின், 147 கிராம் ஐஸ், 231 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,10)

## இந்...

மன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு தனித்தனியாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும், இந்த விஜயத்தின் போது இலங்கையில் இந்திய முதலீடுகள் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கவனம் செலுத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் ஜெய்சங்கர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் உறுதிப்படுத்தப்பட்டட்டு.

இதேவேளை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)

## இலங்கையின்...

மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது அமர்வில் பூகோள ரீதியிலான நிலைமை அறிக்கையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அதனுடன் தொடர்புடைய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் ஏழ்மையான மற்றும் வறுமைக்கோட்டிலுள்ள மக்களை அதிகம் பாதித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் 2021 மற்றும் 2023க்கு இடையில் வறுமை விகிதம் 13.1 சதவீதத்தில் இருந்து 25.9 சதவீதம் வரை இரட்டிப்பாகியுள்ளது. மேலும் இவ்வாறான நிலை அடுத்த சில ஆண்டுகளுக்கு இதே மட்டங்களில் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கூறியுள்ளார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 5509
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 1 7 6 8 2 5
அத சம்பத F 6 8 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 84
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1539
Z 13 53 65 72 Z
Double Chance 66532

மெகா பவர்
திகதி 19/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1857
J 16 01 23 30 77
65128

லக்கி 7 VIP
திகதி 2024.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 0335
V 6 6 4 0 6 6 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3751
சீட்டிழுப்பு திகதி 19.06.2024
W 18 23 25 69
W 94421
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 0818
மேஷம் 11 32 36 55 மேஷம்
20371 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.06.2024 வெற்றி வாரம் 217 வர்ணம் பச்சை
ஆங்கில எழுத்து F
மற்றும் வெற்றி இலக்கம் 5 0 3 9 2 0
73070
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,000,000.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2483 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 19.06.2024 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 36 47 67 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,318,782.40

சனிதா
திகதி 2024.06.19 வெற்றி வாரம் 4644
வெற்றி இலக்கங்கள் 40 43 56 74 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,189,534.40
45712

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4195 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.06.19 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 43 46 55 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,202,938.00
716668

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 35 16 27 36 48
1659
19.06.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 528,615,504.20

ஜயோதா Jayoda
திகதி 2024.06.19 வெற்றி வாரம் 2035 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 08 17 36 57 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,974,844.00
DLB

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2309
சீட்டிழுப்பு திகதி : 2024.06.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 121,462,272.00
அத கோடிபதி ADA KOTIPATHI
19 26 64 66 V
423716


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத் தீர்மானங்களை மீறிச் செயற்படும் ஜனாதிபதி

## சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

பாலின சமத்துவம் தொடர்பான சட்ட மூலத்தை அனுமதிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இணையவழி பாதுகாப்பு சட்டமூலமும் நீதிமன்ற வியாக்கியானத்தை மீறியே நிறைவேற்றப்பட்டது.

இரண்டாவது தடவையாக நேற்றும் மீறப்பட்டுள்ளது. நீதிமன்ற வியாக்கியானங்களை பின்பற்ற தேவை இல்லை என ஜனாதிபதி நேற்று முன்தினம் சபையில் குறிப்பிட்டார்.

தற்போது ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுகின்றார்.

19வது திருத்தச்சட்டத்திலுள்ள சரத்தின்படி முயற்சிக்கின்றார்.

ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களுடன் ஒத்து போகாமல் தனியாக இயங்க முற்படுகின்றார். இதற்கு பாராளுமன்றத்தில் 3 இல் இரண்டு பெரும்பான்மை தேவை என்பதால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சம் வழங்கி தனது பதவி காலத்தை அதிகரிக்க முற்படுகின்றார்.

அத்துடன் கனிபல் லிசம் என்ற சொல்லை ஜனாதிபதி பயன்படுத்தியிருக்ககூடாது. அரசியலமைப்பின் தீர்மானங்களுக்கு உட்பட்டால் மாத்திரமே சட்டமூலங்களை சட்டமாக்க முடியும் இவ்வாறு எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-7.10)

## வழங்கிய...

அமெரிக்காவை உள்ளடக்கிய இந்த குழுவின் அறிக்கையில் இலங்கை அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பலவந்தமான காணாமல் போதல்களால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் அனைத்து சமூகங்கள் மீதான அதன் தாக்கத்தையும் நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் என அதில் கோரப்பட்டுள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட இலங்கையினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட அதன் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவது மிகவும் முக்கியமானதாகும்.

நீதித்துறை சுதந்திரம், நாட்டின் சட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து காணிகள் விடுவிக்கப்படுவது வரவேற்கப்படுகின்றது.

அதேவேளை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பதற்றங்கள், தன்னிச்சையான கைதுகள், ஒழுங்கற்ற தேடுதல்கள் மற்றும் தடுப்புக்காவலின் போது மோசமான முறையில் நடத்தப்படல் போன்ற நிலைமைகள் குறித்து கரிசனை கொள்ள வேண்டியுள்ளது.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, வெளிப்படையான மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7.10)

# யூரோ கிண்ண கால்பந்து

# போர்த்துக்கல் கலக்கல் போராடி வீழ்ந்தது செக்...



யூரோ கிண்ண கால்பந்தில் போர்த்துக்கல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் "திரில்" வெற்றி பெற்றது. கடைசிவரை போராடிய செக் குடியரசு அணி பரிதாபமாக வீழ்ந்தது.

ஐரோப்பிய அணிகளுக்கு இடை யிலான யூரோ கிண்ண கால்பந்து தொடர் ஜேர்மனியில் நடக்கிறது. நேற்று நடந்த "எப்" பிரிவு போட்டியில் "பிபா" தரவரிசையில் 6ஆவது இடத்திலுள்ள கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் போர்த்துக்கல், 36 ஆவது இடத்திலுள்ள செக் குடியரசு அணிகள் மோதின.

போட்டி ஆரம்பித்த 11ஆவது நிமிடத்தில் சக வீரர் ரபேல் லியாவோ கொடுத்த பந்தை, தலையால் முட்டி கோலாக்க முயன்றார் ரொனால்டோ. பந்து வெளியே செல்ல வாய்ப்பு நழுவியது. 32ஆவது நிமிடத்தில் ரொனால்டோ அடித்த பந்தை, செக் குடியரசு கோல் காப்பாளர் ஜின்ரிச் ஸ்டானெக் தடுத்தார். 39ஆவது நிமிடம் முரட்டு ஆட்டம் ஆடிய போர்த்துக்கல் வீரர் ரபேல் லியாவோ, "மஞ்சள் அட்டை" பெற்றார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியில் 55 வது நிமிடம், "பிரீ கிக்" வாய்ப்பில் ரொனால்டோ அடித்த பந்தை, கோல் கீப்பர் ஜின்ரிச் தடுத்தார். போட்டியின் 62வது நிமிடம் விளாடிமிர் கவுபால் கொடுத்த பந்தை பெற்ற லுகாஸ் புரோவோத், வலது காலால் உதைத்து கோலாக மாற்றினார். செக் குடிய ரசு அணி 1-0 என முன்னிலை பெற்றது.

### "சேம் சைட்" கோல்

69 வது நிமிடம் கோல் கீப்பர் ஜின்ரிச் பந்தை தடுக்க, இதை வெளியே தள்ள முயன்றார் செக் குடியரசின் ராபின் ஹரனாக். துரதிர்ஷ்டவசமாக பந்து வலைக்குள் செல்ல, "சேம் சைட்" கோல் ஆனது (ஸ்கோர் 1-1). 78 வது நிமிடம் ரொனால்டோ கொடுத்த பந்தை வாங்கிய விடினா, கோல் போஸ்ட் நோக்கி அடித்தார். இதை அங்கிருந்த செக் குடியரசு கோல் கீப்பர் ஜின்ரிச் ஸ்டானெக் தடுத்தார். 87 வது நிமிடம் போர்த்துக்கலின் தியாகோ கோல் அடித்தார். "வார்" தொழில்நுட்பத்தில் இது "ஓப் சைட்" எனத் தெரியவர கோல் அனுமதிக் கப்பட வில்லை.

இரண்டாவது பாதியின் ஸ்டாப்பேஜ் நேரத்தில் (90+2வது நிமிடம்), மாற்று வீரராக விளையாடிய போர்த்துக்கலின் பிரான்சிஸ்கோ கன்செய்காவோ, இடது காலால் பந்தை உதைத்து கோல் அடித்து கைகொடுத்தார். முடிவில் போர்த்துக்கல் அணி 2-1 என்ற கணக்கில் "திரில்" வெற்றி பெற்றது. (ம-7.10)

## மண்டைதீவு
## கண்ணகை அம்மன் ஊர்வலம் நாளை

(மண்டைதீவு)

மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மனின் கிராம ஊர்வலம் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 24 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பொங்கல் வழிபாடும் தீ மிதிப்பும் இடம் பெறும்.

இந் நாட்களில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ம)

31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 24.05.1946

மறைவு 22.05.2024

கடந்த 22.05.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர்

**அமரர் கந்தையா இராஜரத்தினம்**

**(ஓய்வுபெற்ற பிரதி திட்டப் பணிப்பாளர்)**

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 20.06.2024 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், 21.06.2024 நாளை வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும், கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்**

(C-0643)

பிலாவடி வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
077 983 5070


**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684
(1269)

**யாழ். வேலைவாய்ப்புகள்**
**dewmasweb.com**
**வேலையாட்கள் தேவையா?**
DEWMAS 074 138 3368
(1275)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0645)
College Of International Migration Skills
[illegible] / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0645)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.